**தலைப்பு 16 – பாராளுமன்றம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பாராளுமன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 ஆகஸ்ட் 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்றத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.4(அ) பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பில் கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் பாதிடப்பட்ட பெறுமதிகள் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகள் ஆகியவற்றுக்கிடையே சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள் ரூபா 950,000 தொகையும் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் ரூபா 19,428,000 தொகையும் மானியங்களின் கையளிப்பு மற்றும் மாற்றல்கள் ரூபா 64,260,000 தொகையும் மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 84,638,000 தொகையும் மூலதன சொத்துக்களின் சுவீகரித்தல் ரூபா 325,000 ஆன வேறுபாடுகள் நிலவின. | 2019 ஆம் ஆண்டிற்கான பாதிடப்பட்ட பெறுமதிகள் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகள் சமனாக வேண்டும். | ஏசீஏ 2(1) மற்றும் ஏசீஏ (எவ்) ஆகியவற்றுடன் இணக்கம் செய்யப்பட்டது. ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவினங்களின் கூட்டுத்தொகைக்கு பிரயாணச் செலவினத்தின் கூட்டுத் தொகையும் உள்ளடக்கி காண்பிக்கப்பட்டுள்ளது. மூலதன சொத்துக்களை சுவீகரிப்பதன் கீழ் குத்தகை தவணை உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏசீஏ 2(1) இன் பிரகாரம் மொத்த மீண்டெழும் செலவினங்களுடன் சீராக்கம் செய்யப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| | | பாதீட்டு மதிப்பீடுகளில் சம்பளம் மற்றும் வேதனங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களின் மொத்த பெறுமதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரயாணச் செலவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக்கூற்றில் அது உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் கீழ் ஆகும். |

**1.6.2 நிதிநிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான குத்தகை சொத்துக்களுக்கு செலுத்த வேண்டிய எஞ்சிய பெறுமதி மற்றும் குத்தகை முதலீடுகளின் பெறுமதியான ரூபா 8,425,718 பரீட்சை மீதியில் சரியாக காண்பிக்கப்பட்டிராததுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் (ஏசீஏ-பி மாதிரியில்) நிதியல்லாத சொத்துக்களின் கீழ் குத்தகை முதலீடு மற்றும் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் குத்தகை கடன்கொடுத்தோராக அந்த எஞ்சிய பெறுமதியான ரூபா | நிதிக்கூற்றுக்களில் குத்தகை சொத்துக்களை காண்பிக்கும் போது நிதியல்லாத சொத்துக்களின் கீழ் குத்தகை முதலீடுகள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குத்தகை கடன் கொடுத்தோராக எஞ்சிய பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டியமை. | குத்தகை சொத்துக்களின் பெறுமதி முதல் தடவையாக கணக்கு வைக்கும் போது தாமதத்தினால் ஏற்பட்ட வழுவின் காரணமாக சொத்தின் மொத்த பெறுமதிக்கு பதிலாக தவணைகள் மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பி திருத்தப்பட்டுள்ளது. மேலும், ஏசீஏ-பி மாதிரியில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தொகுதியின் கீழ் குத்தகை கடன் கொடுத்தோரின் பெறுமதி காண்பிக்கப்பட்டுள்ளதுடன் திறைசேரியின் மாதிரியின் பிரகாரம் அது தனியாக |

| | | | |
|---|---|---|---|
| | 8,425,718 உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | காண்பிப்பதற்கு இடமொன்று காணப்படவில்லை. |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் போது கைதவிர்க்கப்பட்டதாக செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த 05 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் டாட்டா வகை பேரூந்து ஆகியவை நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ 06 மாதிரி) கைதவிர்ப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | கைதவிர்ப்புக்கள் ஏசீஏ 06 மாதிரியில் கைதவிர்ப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டியமை. | இணங்குகின்றேன். உரியவாறு பெறுவனவுக் கட்டளைகள் 2019 ஆம் ஆண்டில் கிடைத்திருக்காமையால் சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டிராததுடன் அது 2020 ஆம் ஆண்டின் போது கணக்கு வைக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | 2013 ஜனவரி 24 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ/சுற்றறிக்கை இலக்கம் கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியில் நடைமுறையல்லாத சொத்துக்களை மதிப்பீடு செய்தல் தொடர்பிலான விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், பாராளுமனறத்திற்கு சொந்தமான மாதிவல வீடமைப்புத் தொகுதி, நுவரெலியாவிலுள்ள சென்பதி மெதுர, அநுராதபுரத்திலுள்ள மென் செவன மற்றும் சிரவத்தி மந்திரய ஆகியவற்றை நிரமாணித்துள்ள காணிகள் மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2013 ஜனவரி 24 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ/சுற்றறிக்கை இலக்கம் கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். தேவையான அனைத்து ஆவணங்களும் அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மதிப்பீடு கிடைத்த பின்னர் கணக்கு வைக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஈ) இலங்கை பாராளுமன்றத்திற்கு வெகுமதிகளாக கிடைத்த சொத்துக்களை வெகுமதிகள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிராததுடன், அந்த சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கு வைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வெகுமதிகள் பதிவேட்டில் பதிவு செய்து, மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்பட வேண்டியமை. | இணங்குகன்றேன். பெறுமதிகள் கிடைத்துள்ள சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய சொததுக்களின் பெறுமதிகள் கிடைத்த பின்னர் கணக்கு வைப்பதற்கும், 2020ஆம் ஆண்டினுள் வெகுமதிகள் பதிவேட்டினைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான ஏனைய அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 02 வாகன விபத்துகள் மற்றும் பாராளுமன்றத்தின் சபாபீடத்தின் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக சபைக் கர்ப்பத்தின் ஒலிவாங்கிக் கட்டமைப்பிற்கு மற்றும் உத்தியோகத்தர்களின் கூடங்களுக்கு ஏற்பட்டிருந்த நட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 459,617 மற்றும் தொடர்தும் அறவிடுவதற்கு / பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு நேர்கின்ற நட்டமான ரூபா 172,251 தொகை, 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றக்களில் (குறிப்பு ii) உள்ளடக்கப்படாத, அந்த நட்டம் (குறிப்பு i) நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சரியான படிவங்களில் உள்ளடக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. |

### 1.6.4 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியான ரூபா 124,446,206 மற்றும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகையான ரூபா 123,947,946 ஆனமையால், அவற்றுக்கிடையே ரூபா 498,260 ஆன வேறுபாடொன்று நிலவியது. | முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி மற்றும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை சமனாதல் வேண்டும். | முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி மற்றும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டிற்கு, பதவியணியின் அங்கத்தவர்கள் ஓய்வுபெறும் போது ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அறவிடப்படும் மீதிகள் குறுக்குப் பதிவுகளின் மூலம் அகற்றப்பட்டிராமை காரணமாக அமைந்திருந்தது. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப் பிரமாணம் 104, 109 | 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்த 10 வாகன விபத்துகளின் ரூபா 747,482 ஆன நட்டங்கள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நெயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய பொது 283, 284 மற்றும் 285 அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| **(ஆ)** | **அரச நிதிச் சுற்றறிக்கை**<br>------------------------ | | | |
| | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | உரிய கால எல்லையினுள் 2019ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வினை பூர்த்தி செய்து, மெய்மையாய்வு அறிக்கையின் பிரதியொன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | வருடாந்த பொருள் மெய்மையாய்வுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, மெய்மையாய்வு அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாரள் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக இடைநிறுத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு பணிகள் 2020 யூலை மாதத்தின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் 2017 மே 04 ஆந் திகதிய வெளியிடப்பட்டுள்ள 02/2017 ஆம் இலக்க ஒருங்கிணைந்த சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2016 திஜசெம்பர் 22 ஆந் திகதிய தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபையின் 2004/நூச/1(2016-திருத்தப்பட்ட) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நடாத்தப்பட வேண்டிய நூலக புத்தகங்களின் மெய்மையாய்வுகள், 2019 திசெம்பர் 06 ஆந் திகதியே நடடாத்தப்பட்டிருந்தன. மேலும், அத்திகதியில் 91 புத்தகங்களின் பற்றாக்குறையொன்று நிலவியது. | பற்றாக்குறைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாராளுமன்றத்தின் நூலகத்தின் 2019 ஆம் ஆண்டிற்குரிய புத்தக மெய்மையாய்வுகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை, இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் நீங்கலாக ரூபா 2,879,893 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 1,394,202 தொகை 01 முதல் 24 வருடங்கள் வரையான கால வீச்சில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிட தவறியிருந்தது. | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம், ரூபா 384,502 தொகை 2019 ஆம் ஆண்டினுளய் அறவிட முடியுமானதாக இருந்தது. |

### 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம், குறிப்பு iii இன் கீழான பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்று, திறைசேரியினால் ஒவ்வொரு செலவினத் தலைப்புகள் தொடர்பில் | பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்று, திறைசேரியினால் ஒவ்வொரு செலவினத் தலைப்புகள் தொடர்பில் வெளியிடப்படும் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றுடன் இணங்க வேண்டும். | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு செலவினத் தலைப்புகள் தொடர்பில் வெளியிடப்படும் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றின் பெறுமதியானது தவறானது ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளியிடப்படும் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றுடன் இணங்க வேண்டியதுடன், அவ்வாறு அறிக்கையிடப்பாத எந்தவொரு கடப்பாடும் அல்லது பொறுப்பும் கடந்த வருடத்தின் செலவினமாக 2020 ஆம் ஆண்டினுள் தீர்ப்பனவு செய்யப்படக்கூடாத போதிலும், திறைசேரியினால் ஒவ்வொரு செலவினத் தலைப்ப தொடர்பில் வெளியிடப்படும் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் குறிப்பிடப்படாத ரூபா 216,177,251 ஆன மீண்டெழும் செலவினங்கள் 2020 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (iii) இல் அறிக்கையிடப்பட்டிருந்த ரூபா 7,521,315 கூட்டுத்தொகையான பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள், பொறுப்புகள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | கணக்கு அறிக்கைகளை தயாரிக்கும் போது குறித்த பட்டியல்கள் கிடைத்திருக்காமையால், பொறுப்புகள் கூற்றில் உள்ளடக்க முடியாதிருந்தது. |
| (இ) | பொறுப்புகள் கூற்றில் செலுத் வேண்டிய பொறுப்புகளாக உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 37,166,928 ஆன பொறுப்புகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (iii) இல் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள், பொறுப்புகள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | நிதிப் பிரிவிற்கு அனுப்புதல் தாமதமடைந்துள்ளமையால், நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (iii) இல் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. எவ்வாறெனினும், எதிர்காலத்தில் அவ்வாறான தாமதங்கள் நிகழாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு |

| | | | |
|---|---|---|---|
| | | | உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (உ) | நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம், வழங்கல் மற்றும் சேவைகள் தொடர்பில் வருடாந்தம் மீண்டெழும் செலவினங்களுக்கு உரிய செலவின விடயத்தின் கீழ் பொறுப்புகள் மாத்திரம் நிதிக்கூற்றுகளின் குறிப்பு (iv) இன் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், வழங்கல் மற்றும் சேவைகளின் கீழான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்கு தொடர்பற்ற ரூபா 15,424,808 கூட்டுத்தொகையான பொறுப்புகள், குறிப்பு (iv) இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறித்த பிரிவுகளால் உரிய திகதிகளின் பின்னரும், நிதிப் பிரிவிற்குரிய பெறுப்புகள் அறிக்கையிடப்பட்டுள்ளமை யால், அவற்றை பொறுப்புகள் பதிவேட்டில் உள்ளடக்க நேர்ந்தது. எவ்வாறெனினும், எதிர்காலத்தில் அவ்வாறான தாமதங்கள் நிகழாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாராளுமன்ற அமர்வுகளை நடாத்துதல்

2019 ஆம் ஆண்டு 93 பாராளுமன்ற கூட்டங்கள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், ஆண்டினுள் 90 அமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன. அந்த 90 அமர்வுகளில்பாராளுமன்ற அங்கத்தவர்களின் பங்குபற்றல் பின்வருமாறு காணப்பட்டது.

| **பங்குபற்றியிருந்த மதிப்பிற்குரிய பாராளுமன்ற அங்கத்தவர்களிள் எண்ணிக்கை** | **நடாத்தப்பட்ட கூட்ட அமர்வுகள்** |
|---|---|
| 01 முதல் 25 வரை | 00 |
| 26 முதல் 50 வரை | 01 |
| 51 முதல் 75 வரை | 03 |
| 76 முதல் 100 வரை | 06 |
| 101 முதல் 125 வரை | 13 |
| 126 முதல் 150 வரை | 21 |
| 151 முதல் 175 வரை | 26 |

| | |
|---|---|
| 176 முதல் 200 வரை | 16 |
| 201 முதல் 225 வரை | 04 |
| **மொத்தம்** | **90** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டினுள் நடாத்தப்பட்டிருந்த 90 அமர்வுகளில், 01 பாராளுமன்ற அமர்விற்காக 50 இற்கும் குறைவான எண்ணிக்கையிலான பாராளுமன்ற அங்கத்தவர்கள் பங்குபற்றியிருந்ததுடன், 04 அமர்வுகளில் 200 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற அங்கத்தவர்கள் பங்குபற்றிரிருந்தனர்.

(ஆ) சட்ட வரைபுகளை அங்கீகரித்தல்

2019 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 41 அரசின் சட்டமூலங்களினுள் 24 சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், சமர்ப்பிக்கப்பட்ட 06 தனிப்பட்ட உறுப்பினர்களின் சட்டமூலமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

(இ) அரசாங்க கணக்குகள் குழு

அரசாங்க கணக்குகள் குழுவினால் 2019 ஆம் ஆண்டில் 31 சந்தர்ப்பங்களில் 20 நிறுவனங்களின் செயலாற்றல் மற்றும் தற்போதைய நிலை தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக 31 கணக்குகள் குழுக் கூட்டங்களும், 11 வருடாந்த விடயங்கள் தொடர்பிலான விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அரச கணக்குகள் குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் 03 அறிக்கைகள் 2019 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பொது முயற்சிகள் தொடர்பான குழு

அரச பொதுமுயற்சிகள் குழுவினால் 2019 ஆம் ஆண்டில் 37 நிறுவனங்களின் செயலாற்றல் மற்றும் தற்போதைய நிலை தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக பொது முயற்சிகள் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்கள் தொடர்பிலான 04 அறிக்கைகள் மீளாய்வாண்டின் போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மக்கள் முறையீட்டு செயற்குழு

2019 ஆம் ஆண்டில் செயற்குழுவிற்கு 586 புகார்கள் கிடைத்திருந்ததுடன், இவ்வாண்டில் 33 கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டு இதில் 412 புகார்கள் ஆராயப்பட்டிருந்தன. இதில் 179 முறையீட்டு கோவைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், 06 மனுதாரர்களுக்கு நிவாரணமளிக்கப்பட்டிருந்தது.

## 3.2 கொவிஜன மந்திரயவினை சுவீகரித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பாராளுமன்ற குழுக்கள் முறைமையை மாற்றியமைத்தல் மற்றும் மேலதிக அலுவலகங்க இடவசதியை பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றுக்காக 2015 செப்தம்பர் 21 ஆந் திகதிய 15/1301/702/007 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு தேவையான இடவசதியைப் பெற்றுக்கொள்வதற்காக 02 மாற்று வழிகள் முன்மொழியப்பட்டிருந்ததுடன், அதன் முதலாவது முன்மொழிவின் அடிப்படையில் விவசாய அமைச்சு அமைந்திருந்த கொவிஜன மந்திரய கட்டிடத்தினை சுவீகரித்தல் மிகவும் பயனுள்ளது என தீர்மானிக்கப்பட்டது.<br><br>அதன் பிரகாரம், கொவிஜன மந்திரயவினை பாராளுமன்றத்திற்கு பொருத்தமான வகையில் மாற்றியமைப்பதற்காக பாராளுமன்றத்தினால் 16-01-02-2509 ஆம் இலக்க செலவினம விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 275,000,000 ஆன நிதியேற்பாட்டில், ரூபா 161,934,795 ஆன தொகையானது 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் செலவிடப்பட்டு அது மீளமைக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக பாராளுமன்றத்தினால் நீர் மற்றும் மின்சாரத்திற்காக மீண்டெழும் செலவினங்களாக ரூபா 6,747,036 கூட்டுத்தொகை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்டிருந்தது. | அடையக்கூடிய கொள்கைத் தீர்மானங்கள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியமை. | 2015 ஆம் ஆண்டின் போது துறைசார் கண்காணிப்பு குழு முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டு, அதற்கு தேவையான இடவசதிகளை ஒதுக்குவதில் சிக்கல்கள் காணப்பட்டமையால் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அப்போது விவசாய அமைச்சு தாபிக்கப்பட்டிருந்த கொவிஜன மந்திரய கட்டிடத்தினை பாராளுமன்றத்திற்கு சுவீகரிக்கும் முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. சுமார் 21 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருந்த மேற்படி கட்டிடத்தில் பாராளுமன்றத்தின் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு பல்வேறு மீளமைத்தல்களை மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் கடற்படைக்கு குறித்த பணிகளை ஒப்படைப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளமைத்தல் தேவையானதாக காணப்பட்ட அந்த பணிகளுக்காக ரூபா 162 மிழல்லியன் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும், |

| | | |
|---|---|---|
| 2019 திசெம்பர் 18 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், விவசாய அமைச்சினை மீள கொவிஜன மந்திரயவிற்கு கொண்டு சென்றமையால் குறித்த கட்டிடத்தின் மீள்திருத்தம் மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக பாராளுமன்றத்தின் செலவினத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்ட ரூபா 168,681,831 பாராளுமன்ற குழுக்கள் முறைமையை மாற்றியமைத்தல் மற்றும் மேலதிக அலுவலகங்க இடவசதியை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | | மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 6 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளதுடன், மீள்திருத்தப் பணிகள் நிறைவடைந்த பின்னர் ஒட்டுமொத்த கட்டிட வளாகத்தினதும் இடவசதிளை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்காக திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நீர்மாணிக்கப்பட்டு 21 வருடங்கள் கடந்த நிலையிலுள்ள இந்த கட்டிடத்தின் பயன்படு ஆயுட்காலத்தினை அதிகரிப்பதற்கு செலவிடப்பட்ட இந்த பணத்ததை அரிசிற்கு ஏற்பட்ட நட்டமொன்றாக கருத முடியாது. |

**3.3 பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு புறம்பாக செயற்படல்**

---

**பாராளுமன்றத்தின் உள்ளக வீதிகளினை இடுதல் மற்றும் காபட் இழைத்தல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) குறைநிரப்பு மதிப்பீடொன்றின் ஊடாக ரூபா 167 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு துரிதமாக நிறைவு செய்வதற்காக வீதி அபிவிருத்தி தகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மேற்படி பணிக்கான பெறுகை நடவடிக்கைகளுக்காக 3 வார காலமும், பௌதீக பணிகளுக்காக 12 வார காலமும் எடுப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் குறிப்பிடப்பட்டிருந்த | பணி உரிய காலத்தினுள் நிறைவு செய்யப்பட வேண்டும். | பாராளுமன்றத்தின் சேவை கூட்டின் பிரகாரம் பொறியியல் பிரிவின் பதவியணி முன்னுரிமை இலக்குகளை உச்ச அளவில் நிறைவேற்றுவதற்கு தேவையான சேவைகளான பாராளுமன்றத்தி0ன் நாளாந்த பராமரிப்பு பணிகளில் ஈடுபடுகின்றது. எவ்வாறெனினும், பாராளுமன்றத்தின் வளாகத்தில் ஏற்பட்ட விசேட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளல் |

போதிலும், எதிர்பார்த்த காலத்தினுள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. 02 வருடங்களின் பின்னர், அதாவது 2019 யூலை 01 ஆந் திகதி பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அத்திகதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளரால் (கொழும்பு) அறிவிக்கப்பட்டிருநுந்தது. எவ்வாறெனினும், வாயில் இலக்கம் 03 இன் இருமருங்கிலும் உள்ள நடைபாதைகளை அமைக்கும் பணிகள் மற்றும் வாயில் இலக்கம் 01 முதல் 02 வரையிலுமான மின்சார விளக்குகளுக்கான தூண்களை பொருத்தும் பணிகள் இதுவரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதும், அதற்கு மேலதிகமாக தொடர்ச்சியாக நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும், பணி செயன்முன்னேற்றமானது மிகவும் குறைவாக உள்ளதாக பாராளுமன்றத்தின் இணைப்பு பொறியியளாலரால் 2019 யூன் 28 ஆந் திகதி பாராளுமன்ற பொதுச் செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்த்தல் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

மற்றும் ஒழுங்கமைப்பதற்கு பொதுமான பிரிவுகள் அவர்களிடம் காணப்படவில்லை. அதன் காரணமாக பாதுகாப்பு காரணங்களின் அடிப்படையில் பாராளுமன்றத்தின் கட்டிடத்தின் வளாகத்துடன் அண்மியதாக ஏற்பட்ட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளல் அரசினதும், ஏனைய தொடர்புடைய நிறுவனங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன், அந்த ஊழியர்கள் மிகவும் பொறுப்பான முறையில் பாராளுமன்றத்தின் பராமரிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அந்த நிறுவனத்தினால் முன்வைக்கப்படும் கிரய மதிப்பீடுகளின் அடிப்படையில் போதுமான பணத்தை பொது திறைசேரியிலிருந்து ஒதுக்கீடு செய்து, அந்த நிதியாண்டினுள்ளேயே அரச நிறுவனங்களுக்கு வழங்கி பணிகளை நிறைவு செய்ய பாராளுமன்றம் முயற்சி செய்கின்றது. இந்த பணிக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை முழுமையான பங்களிப்பினை வழங்கியிருந்ததுடன், மற்றுமொரு அரச நிறுவனத்துடன் செயற்படும் போது காண்பிக்கப்படும் உச்ச நம்பகத்தன்மையினை வெளிப்படுத்தி, முழு நடைமுறையிலும் நினைவுறுத்தல் கடிதங்கள் மற்றும் விடயங்களை குறிப்பிட்டு எழுத்துமூலம் அறிவித்தல் மேற்கொண்டு பாராளுமன்றத்தினால்

| | | | |
|---|---|---|---|
| | | | தமது பின்தொடர் பொறுப்பினை உச்சமான முறையில் நிறைவேற்றப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (ஆ) | செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 172,321,000 இல் ரூபா 167,000,000 தொகை 2017 ஆம் ஆண்டின் போது செலுத்தி முடிக்கப்பட்டிருந்தது. அந்த பெறுமதி மொத்த மதிப்பிடப்பட்ட தொகையில் 97 சதவீதமாக காணப்பட்ட போதிலும், அந்த பணத்தை செலுத்தும் போது பிடிகாசினை கழிப்பதற்கு அல்லது குறித்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் செய்யப்பட்ட வேலைகளின் பகுதிகளை மதிப்பீடு செய்வதற்கு அல்லது நிறைவு செய்த பணிகள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரால் சான்றுபடுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மேற்குறித்த பதில் பொருந்தும். |
| (இ) | ரூபா 172,321,000 தொகையான ஆரம்ப மதிப்பீடு 2018 ஒக்தோபர் 16 மற்றும் 2019 ஏப்ரல் 30 ஆகிய திகதிகளில் திருத்தப்பட்டிருந்த போதிலும், 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. மேலும், 2017 யூன் 20 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரால் மதிப்பீட்டு பெறுமதிகள் ஒப்பந்தம் | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மேற்குறித்த பதில் பொருந்தும். |

| | | | |
|---|---|---|---|
| | கையளிக்கப்பட்டதன் பின்னர் சிறு மாற்றங்களுக்கு உட்பட முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 67,018,000 இனால் மதிப்பீட்டு பெறுமதி அதிகரித்திருந்தது. அந்த பெறுமதி அதிகரிப்பு உண்மையாக அதிகரித்திருந்ததா என்பது தொடர்பில் பாராளுமன்றத்தினால் (அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு) சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | வாயில் இலக்கம் 01 மற்றும் 02 இல் அச்சுக் கற்கள் பதிக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டுள்ள சுருக்கம் விழுந்த தன்மை தொடர்பில் மதிப்பிற்குரிய பாராளுமன்ற அமைச்சர்கள், பதவியணியினர் உள்ளடங்கலாக வீதியை பயன்படுத்துவோர் முறைப்பாடு செய்திருந்த போதிலும், உள்ளக வீதிக் கட்டமைப்பினை புனரமைக்கும் போது ஏற்பட்டுள்ள குறைபாடுகள் 24 தொடர்பில் அறிக்கையிட்டிருந்த போதிலும், அவை நிவர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மேற்குறித்த பதில் பொருந்தும். |
| (உ) | வாயில் இலக்கம் 01 மற்றும் 02 இல் அச்சுக் கற்கள் பதிக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டுள்ள சுருக்கம் விழுந்த தன்மை காரணமாக இழைக்கப்பட்டிருந்த அச்சுக்கற்கள் அகற்றப்பட்டு, மீண்டும் இழைத்தல் | ஒப்பந்தம் கையளிப்பின் போது முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | மேற்படி பதில் பொருந்தும். |

| | | | |
|---|---|---|---|
| | இடம்பெற்றிருந்ததுடன், இதற்காக மேலதிக கிரயமொன்றினை மேற்கொள்ள நேர்ந்தது. | | |
| (ஊ) | 15 வாராங்களினுள் பாராளுமன்றத்தின் உள்ளக நடைபாதைகளை இடுதல் மற்றும் காபட் இழைத்தல் ஆகிய பணிகளை நிறைவு செய்யும் நோக்கில் பெறுகை முறைமைகளிலிருந்து விலகி, அந்த பணி பாராளுமன்றத்தினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தினால் அந்த பணி மக நெகும கம்பனிக்கும், மக நெகும கம்பனியால் குறித்த பணியானது அம்பாறை மாவட்டத்திலுள்ள தனியார் ஒப்பந்த நிறுவனமொன்றிற்கும் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த தனியார் ஒப்பந்ததாரருக்கு இயலுமை இல்லாதிருந்ததுடன், 2017 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்ட வீதிளை துரிதமாக நிர்மாணிக்கும் பணிகள் 2019 ஆம் ஆண்டு வரையிலும் நிறைவு செய்ய முடியாது போயிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட்டது. | மேற்படி பதில் பொருந்தும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

---

### 4.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி, ஆளனி வேதனம் மற்றும் செலவினம்

---

மீளாய்வாண்டிற்காக பாராளுமன்றத்தினால் ஆளனி வேதனங்கள் செலவினம விடயத்திற்காக ரூபா 1,185.89 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை பதவியணி |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 82 | 69 | 13 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 173 | 149 | 24 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 295 | 231 | 64 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 520 | 492 | 28 | - |
| (v) | அமைய/ ஒப்பந்த/ தற்காலிக | - | 20 | - | 20 |
| | **மொத்தம்** | **1,070** | **951** | **139** | **20** |

மேற்படி தகவல்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 139 பதவி வெற்றிடங்கள் மற்றும் 20 மிகைகள் காணப்பட்டன.